©
தமிழ்நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 34] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 26, 2015
ஆவணி 9, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு – 2046

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 79, சுற்றுச்சூழல் மற்றும் வன (வனம்–13)த் துறை, 23 ஜூலை 2015.]*

தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 26 ஆம் பிரிவு மற்றும் 35, 63 ஆகிய பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2010 ஆம் ஆண்டு மரம் சார்ந்த தொழில்களை முறைப்படுத்தும் விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளைச்சேர்ந்த 14ஆம் விதியில்,–

(1) தற்போதுள்ள விதித்துறை, 14ஆம் விதியின்

(1) துணைவிதியாக இலக்கமிடப்பட வேண்டும்;

(2) அவ்வாறு இலக்கமிடப்பட்ட

(1) துணைவிதிக்குப்பின்னர், கீழ்க்காணும் துணைவிதி சேர்க்கப்பட வேண்டும்,

அதாவது:–

(2) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு வெட்டுமரத்தை எடுத்துச்செல்வதற்கான விதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட தீக்குச்சி சிம்புகளின் வகைகளை அறுத்தல் மற்றும் மேலொட்டுதல் ஆகியவை தீக்குச்சி அல்லது சிம்பு உற்பத்தியில் ஒரு பகுதியாக இருக்கிறவிடத்து, இந்த விதிகளில் அடங்கியுள்ள எவையும் தீக்குச்சி சிம்புகளின் தொழில்களுக்குப் பொருந்தாது.

**ஹன்ஸ்ராஜ் வர்மா,**
*அரசு முதன்மைச்செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.